## 20.18 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தொடர் மற்றும் உடன் தணிக்கை முறையை செயல்படுத்துதல்

ஊரக வளர்ச்சி (சி3) துறை

அரசாணை (நிலை) எண்.95 நாள் : 10.4.2000

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.106231/98 எல்.எப்.ஏ.5 நாள் 14.1.1999.
2. உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநரின் நே.மு.க. எண்.ஏ2/35692/98, நாள் 22.2.1999.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் வழங்குவது தொடர்பாக, அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தனது பரிந்துரை எண்.46ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் உடனடித் தணிக்கை முறை மற்றும் தொடர் தணிக்கை முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என அரசிற்கு பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை நடைமுறைப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, இப்பொருள் தொடர்பாக வளர்ச்சி ஆணையர் மற்றும் செயலாளர் நிதித்துறை 30.11.1999 அன்று கூட்டிய கூட்டத்தில் செயலர், ஊரக வளர்ச்சித்துறை, சிறப்புச் செயலர், நிதித்துறை, ஊரக வளர்ச்சி இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநர் மற்றும் நிதித்துறை கூடுதல் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு விரிவான விவாதத்திற்கு பின்னர் கீழ்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. கிராம ஊராட்சிகளில் பாராமரித்து வரப்படும் கணக்குகள் அனைத்தையும் துணை வட்டார வளர்ச்சி அதிகாரியும் (தணிக்கை) அவருடன் உள்ள பணியாளர்களைக் கொண்டு காலாண்டுக்கு ஒருமுறை தணிக்கை செய்யும் பணி செயலுக்கு கொண்டு வரப்படும். கிராம ஊராட்சியின் நிதி–111 தணிக்கை செய்யும் பணியை உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மேற்கொள்ள 1997 முதல் அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்த நிதி–111 ஐ தணிக்கை செய்யும் பணி இனிமேல் வட்டார வளர்ச்சி துணை அதிகாரியின் (துணிக்கை) பொறுப்பாகும். உள்ளாட்சி நிதி தணிக்கை கிராம ஊராட்சிகளில் தணிக்கை அறிக்கைகளை ஆய்வு செய்யும், தேவைப்பட்டால் அவசியமான இடங்களில் சோதனை தணிக்கையை மட்டும் மேற்கொள்ளும்.

2. ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை காலாண்டுக்கு ஒருமுறை தணிக்கை செய்யும். தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநர் காலாண்டுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் தணிக்கை பணி திட்டமிட்ட கால அளவுக்குள் முடிக்கப்படும் முறையில், தணிக்கை குழுக்களை பிரித்து அனுப்புவார். முடிவுறாமல் உள்ள தணிக்கை பணி அடுத்த 90 நாட்களுக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

3. மாவட்ட ஊராட்சிகளில் வரையறுக்கப்பட்ட அளவு பற்று வரவுகள் நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை ஆண்டு தணிக்கை பணியை மேற்கொள்ளும்.

4. காலாண்டு உடன் தணிக்கை (concurrent quarterly Audit) பணி 2000ம் ஆண்டு ஜனவரி முதல் தொடங்கும்.

5. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்காக தணிக்கை நடைமுறை நூல் ஒன்றைத் தயாரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. ஊரக வளர்ச்சி மாநில நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று, உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குநர் தகுந்த ஆய்வு பெற்ற அதிகாரி ஒருவரை தெரிவிப்பார். அவரின் பணிகளை ஊரக வளர்ச்சி இயக்குநர் பயன்படுத்திக்கொள்வார். தணிக்கை நடைமுறை நூல் 90 நாட்களுக்குள் இறுதியாக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநரிடமும், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரிடமும் நிலைபெற்றுள்ள அதிகாரங்களைக்கொண்டு அவர்களால் உரியவாறு அரசு நிலையில் அது வெளியிடப்படும்.

2. அரசு 30.11.99 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்கண்ட முடிவுகளை நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. கிராம ஊராட்சிகளில் பராமரித்து வரப்படும் கணக்குகள் அனைத்தையும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) மற்றும் அவருடன் உள்ள பணியாளர்களைக் கொண்டு காலாண்டுக்கு ஒருமுறை தணிக்கை செய்யும் பணி செயலுக்கு கொண்டு வரப்படுகிறது. கிராம ஊராட்சியின் நிதி–111–ஐ தணிக்கை செய்யும் பணி இனிமேல் துணை வட்டார வளர்ச்சி அலுவலரின் பொறுப்பாகும். உள்ளாட்சி நிதி தணிக்கை

துறை கிராம ஊராட்சிகளின் தணிக்கை அறிக்கைகளை ஆய்வு செய்யும். தேவைப்பட்டால் அவசியமான இடங்களில் சோதனை தணிக்கை மட்டும் மேற்கொள்ளும்.

2. ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை உள்ளாட்சி நிதி தணிக்கை துறை காலாண்டுக்கு ஒரு முறை தணிக்கை செய்யும். தற்போது உள்ள பணியாளர்களைக் கொண்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், காலாண்டுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் தணிக்கைப் பணி திட்டமிட்ட கால அளவுக்குள் முடிக்கப்படும் முறையில் தணிக்கை குழுக்களை பிரித்து அனுப்புவார். முடிவுறாமல் உள்ள தணிக்கைப் பணி அடுத்த 90 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

3. மாவட்ட ஊராட்சிகளில் வரையறுக்கப்பட்ட அளவு பற்று வரவுகள் நடைபெறுவதை கருத்தில் கொண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை ஆண்டு தணிக்கை பணியை மேற்கொள்ளும்.

4. காலாண்டு உடன் தணிக்கை (concurrent quarterly Audit) பணி 2000ம் ஆண்டு ஜனவரி முதல் தொடங்கும்.

5. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தணிக்கை நடைமுறை நூல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சி மாநில நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் தகுந்த ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவரை தெரிவிக்க வேண்டும். அவரின் பணியினை ஊரக வளர்ச்சி இயக்குநர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தணிக்கை நடைமுறை நூல் 90 நாட்களுக்குள் இறுதியாக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநரிடமும் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரிடமும் நிலை பெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு மேற்கண்ட தணிக்கை நடைமுறை நூல் அரசு நிலையில் வெளியிடப்பட வேண்டும்.

3. இவ்வாணையை அனைத்து கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் கவனத்திற்கு கொண்டு வருமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை—அத்துறையின் அ.சா.கு.எண்.27833/உ.த/ 2000—1 நாள் 7.4.2000ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்